செ.வெ.எண்: 2 / ஜுலை /2020 நாள்: 02.07.2020

# <u>பத்திரிக்கைச் செய்தி குறிப்பு</u>

## <u>இணையதள தொழில்நெறி திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி</u>

2020-ஆம் ஆண்டு ஜீலை இரண்டாவது வாரம் 08.07.2020 முதல் 15.07.2020 வரை “**தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் வாரம்**” அனுசரிக்கும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, தமிழ் நாடு திறன் மேம்பாட்டுக்கழகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் இணைந்து இணையதளம் வழியாக(**Webinar**) நடத்துகிறது.

இந்நிகழ்ச்சியில் இணையதளம் வழியாக பள்ளி கல்லூரி மாணவர்கள், தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள், மாற்றுத்திறனாளர்கள், தொழில் முனைவோர்கள் மற்றும் மகளிருக்கான திறன் விழிப்புணர்வு தொடர்பான தகவல்கள் வழங்கப்படுகின்றன. இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் **<u>tcdonline2020@gmail.com</u>** என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் தொடர்பு கொள்ளலாம். மேலும், விவரங்களுக்கு **94990 55902, 0431 – 2413510** என்ற தொலைப்பேசி எண்களை தொடர்பு கொள்ளலாம் என திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.சு.சிவராசு,இ.ஆ.ப.** அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு :**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**